சுருக்கம்

விருதுகள் - 2022ஆம் ஆண்டிற்கான நல்லாளுமை விருது அறிவித்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

மனித வள மேலாண்மைத் (பயிற்சி-3) துறை

அரசாணை (நிலை) எண்.87

நாள் 11.08.2022
சுபகிருது, ஆடி 26
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.166, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி-3) துறை, நாள் 28.12. 2011.
2. அரசாணை (நிலை) எண்.51, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி-3) துறை, நாள் 16.04.2012.
3. அரசாணை (வாலாயம்) எண்.130, மனித வள மேலாண்மைத் (பயிற்சி-3) துறை, நாள் 25.05.2022.

*****

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி நல் ஆளுமையில் சிறந்த பயன் எய்திட பணியாற்றியவர்கள், வெற்றிகரமாக புதிய யுத்திகள், புதிய முயற்சிகள் மற்றும் சிறந்த வழிமுறைகள் ஆகியவற்றை செயலாக்கியதன் மூலம் பொதுமக்களுக்கு சிறந்த சேவை கிடைக்க சக பணியாளர்களை வழிநடத்துவோர், அரசின் திட்டங்கள் மற்றும் சேவைகள் பொதுமக்களுக்கு முறையாக கிடைக்க பணிபுரிந்தோர் ஆகியோருக்கு ஒவ்வொரு ஆண்டும் நல்லாளுமைக்கான விருது வழங்கப்படுவதற்கு பரிந்துரைகள் கீழ்காணும் பிரிவுகளின் கீழ் பெறப்படுகிறது.

(i) அரசு ஊழியர்கள், தனி நபராகவோ
(ii) ஒரு குழுவாகவோ
அல்லது
(iii) அமைப்பு / நிறுவனம் / அலுவலகம்

தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பரிந்துரைகளுக்கு நல்லாளுமை விருதுடன் ரூ.2.00 இலட்சம் வெகுமதியும், சுதந்திர தினத்தன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படுகிறது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் நல்லாளுமை விருதுக்கான முன்மொழிவுகளை தெரிவு செய்வதற்கான வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

த.பி.பா.

3. நல்லாளுமை விருது-2022க்காக பெறப்பட்ட 70 விண்ணப்பங்கள் 30.07.2022 அன்று நடைபெற்ற நிதித்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் தலைமையிலான தெரிவுக் குழுவின் கூட்டத்தில் ஆராயப்பட்டு, கலந்துரையாடலுக்குப்பின் சிறந்த முயற்சிகள் தெரிவு செய்யப்பட்டதனை தலைமைச் செயலாளர் தலைமையிலான தேர்வுக்குழு, 08.08.2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில் கீழ்காணும் முயற்சிகளுக்கு நல்லாளுமை விருதும், 12 முயற்சிகளுக்கு பாராட்டு சான்றிதழ்கள் வழங்கவும் பரிந்துரை செய்துள்ளது.

<u>நல்லாளுமை விருது-2022</u>

1. (i) 'சிறகுகள் – செங்கல்கள்' 'கொத்தடிமைத்தனத்திலிருந்து மீட்டு மறுவாழ்வு அளித்தல்' – திருவள்ளூர் மாவட்டம்
   (ii) திருநங்கைகளின் வாழ்க்கை மாற்றத்திற்கான முன்முயற்சி – செங்கல்பட்டு மாவட்டம்
2. (i) மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் – திண்டுக்கல் மாவட்டம்
   (ii) நீர்நிலைகளை மீட்டுருவாக்கி புனரமைத்தல் – சிவகங்கை மாவட்டம்
3. (i) 'தாய்கேர் நெல்லை' - பேறுகால மகளிர் நலம் - திருநெல்வேலி மாவட்டம்
   (ii) இ-வாடகை – வாடகைக்கு வேளாண் இயந்திரங்கள் கைப்பேசி செயலி – வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை
   (iii) காவல் கரங்கள் முதியோர் / இயலாதோர் மறுவாழ்வு - சென்னை மாநகர காவல் துறை

4. தேர்வுக் குழுவின் பரிந்துரையை ஏற்றுக் கொண்டு கீழ்காணும் முயற்சிகளுக்கு 2022ஆம் ஆண்டிற்கான நல்லாளுமை விருதுகள் வழங்க அரசு ஆணையிடுகிறது.

| வ. எண். | முயற்சிகள் | விருது பெறுபவர் / துறை |
|---|---|---|
| 1. | (i) சிறகுகள் – செங்கல்கள்<br><br>திருவள்ளூர் மாவட்டத்தில் செங்கற் சூளையில் கொத்தடிமைகளாக பணிபுரிந்தவர்களை மீட்டெடுத்து செங்கற் சூளைகளை அவர்களே நடத்திடும் வகையில் தொழில் முனைவோராக வாழ்க்கை தரத்தை உயர்த்தியது. | மாவட்ட ஆட்சியர்,<br>திருவள்ளூர் மாவட்டம் |
| | (ii) திருநங்கைகளின் வாழ்க்கை மாற்றத்திற்கான முன்முயற்சி<br><br>செங்கல்பட்டு மாவட்டத்தில் சமுதாயத்தில் விளிம்பு நிலையிலும், பின்தங்கியவர்களாகவும் உள்ள திருநங்கைகளுக்கு அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து நிலையான வளர்ச்சி இலக்கை அடைய எடுக்கப்பட்ட முன்முயற்சி. | மாவட்ட சமூகநல அலுவலர்,<br>செங்கல்பட்டு மாவட்டம் |

| வ. எண். | | முயற்சிகள் | விருது பெறுபவர் / துறை |
|---|---|---|---|
| 2. | (i) | மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள்<br><br>திண்டுக்கல் மாவட்டத்தில் மழை நீர் சேகரிக்கப்பட்டு மூன்று அடுக்குகளாக சுத்திகரிக்கப்பட்டு தரைமட்ட தொட்டியில் சேமித்து கழிவறை, கை கழுவுதல், பாத்திரங்கள் கழுவுதல் போன்றவற்றிற்கு பயன்படுத்துவதுடன், மிகைநீரினால் நிலத்தடி நீரும் செறிவூட்டப்படுகிறது. | மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் மாவட்டம் |
| | (ii) | சிவகங்கை மாவட்டத்தில் நீர்நிலைகளை மீட்டு உருவாக்கி புனரமைத்தல்<br><br>சிவகங்கை மாவட்டத்தில், மாவட்ட நீர்பிடி மேலாண்மை முகமையில் இருந்த விவசாயிகளின் பங்களிப்பு தொகை மூலம் 20 JCB இயந்திரங்கள் வாங்கப்பட்டு அதன் மூலம் நீர்நிலைகள் தூர்வாருதல், ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் ஆகிய செயல்கள் குறைந்த செலவில் மேற்கொள்ளப்பட்டது. | மாவட்ட ஆட்சியர், சிவகங்கை மாவட்டம். (தற்போது இயக்குநர் புவியியல் மற்றும் சுரங்கத்துறை) |
| 3. | (i) | தாய்கேர் நெல்லை - திருநெல்வேலி மாவட்டம்<br><br>நெல்லை மாவட்ட தாய்மார்களின் பேறுகால நலனை தகவல் தொழில்நுட்பங்களின் மூலம் கண்காணித்து பொது சுகாதார அமைப்புகளில் செயல்படுத்தப்பட்டதன் மூலம் பேறுகால இறப்புகளின் சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. | மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி மாவட்டம். |
| | (ii) | இ-வாடகை - வேளாண் இயந்திரம் வாடகை கைப்பேசி செயலி<br><br>இணையவழி மூலம் வேளாண் இயந்திரங்களை கைப்பேசி செயலியினால் சுலபமாக வாடகைக்கு அமர்த்தி விவசாயிகள் பயன் பெற செய்தல். | முதன்மைப் பொறியாளர், தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் துறை |
| | (iii) | காவல் கரங்கள் - சென்னை பெருநகர காவல் துறை<br><br>சென்னை பெருநகர காவல் துறையால் ஆதரவற்ற, மனநிலை பாதிக்கப்பட்டவர்களை மீட்டு மருத்துவ சிகிச்சை அளித்து, பராமரித்து அவர்களின் முகவரி அறிந்து குடும்பத்தாருடன் இணைப்பது மற்றும் உரிமை கோரப்படாத இறந்தவர்களின் உடல்கள் உரிய மரியாதையுடன் அடக்கம் செய்வது. | ஆணையர், சென்னை பெருநகர காவல் துறை |

5. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் பயிற்சித் துறைத் தலைவர் அவர்களுக்கு ரூ.7.00 இலட்சம் (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) வழங்கப்பட்டு அத்தொகையினை இயக்குநர், அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி அவர்களிடம் நல்லாளுமை விருது-2022 தொடர்பான செலவினங்கள் மேற்கொள்வதற்காக வழங்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டு நல் ஆளுமை விருது வழங்கப்பட உள்ளவர்களுக்கு மேற்படி விருது தொகையினை சமமாக பிரித்து வழங்குவதற்கேற்ப காசோலை பெற்று இத்துறைக்கு வழங்குமாறு அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. தேர்வுக் குழுவின் பரிந்துரையின்படி கீழ்காணும் 12 முயற்சிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் தனியே வழங்கப்படும்.

1. உண்ணி மரச்செடிகள் மூலம் கைவினைப் பொருட்கள் தயாரித்தல் – நீலகிரி மாவட்டம்
2. காணி ஒருங்கிணைந்த வாழ்வாதார மேம்பாடு - திருநெல்வேலி மாவட்டம்
3. முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்ட பயன் - தரவு பகுப்பாய்வு மூலம் உறுதிசெய்தல் - மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை
4. இன்னுயிர் காப்போம் - "நம்மைக் காக்கும் 48" – திட்டம் - மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை
5. கருப்பை மற்றும் கருமுட்டை குழல் படம் மற்றும் மார்பக நுண்கதிர் பட தொழில்நுட்பம் மூலம் பெண்களின் உடல் நலம் பேணுதல் - கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை
6. பெருநகர சென்னை மாநகராட்சியின் சொந்த ஆதார வருவாயினை புவிசார் தகவல் மற்றும் ஆளில்லா விமான தொழில்நுட்பம் மூலம் அதிகப்படுத்துதல்
7. இணையம் மூலம் கைத்தறி, கைவினைப் பொருட்களை நேரடி சந்தைப்படுத்துதல் - அரியலூர் மாவட்டம்
8. தஞ்சை நஞ்சையில் உளுந்துசாகுபடி திட்டம் - தஞ்சாவூர் மாவட்டம்
9. "கரூரின் கண்மணிகள்" - கரூர் மாவட்டம்
10. 'ஒன்றுபடுவோம் உறுதி ஏற்போம்' - இளம் பெண்கள் நலம் - நாமக்கல் மாவட்டம்
11. 'கண்மணி திட்டம்' - விருதுநகர் மாவட்டம்
12. ஒருங்கிணைந்த திருக்கோயில் நிர்வாக மேலாண்மை திருக்கோயில்களின் அனைத்து தரவுகளையும் உள்ளடக்கிய மேலாண்மைத்திட்டம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மைதிலி க. ராஜேந்திரன்
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,
அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரி மற்றும் பயிற்சித் துறைத் தலைவர்,
மகிழம்பூ, எண்.163/1, ப்பி.எஸ் குமாரசாமி ராஜா சாலை, சென்னை 600 028.

முதன்மைச் செயலாளர், மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை, சென்னை-600 009.
செயலாளர், பொதுத்துறை, சென்னை-600 009.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-600 003.
ஆணையர், சென்னை பெருநகர காவல் துறை, சென்னை-600 007.
ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, சென்னை-600 034.
இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சென்னை-600 032.
மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம்.
மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் மாவட்டம்.
மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி மாவட்டம்.
முதன்மைப் பொறியாளர்,
தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் துறை, சென்னை-600 035.
மாவட்ட ஆட்சியர், நீலகிரி மாவட்டம்.
மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி மாவட்டம்.
மாவட்ட ஆட்சியர், அரியலூர் மாவட்டம்.
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் மாவட்டம்.
மாவட்ட ஆட்சியர், கரூர் மாவட்டம்.
மாவட்ட ஆட்சியர், நாமக்கல் மாவட்டம்.
மாவட்ட ஆட்சியர், விருதுநகர் மாவட்டம்.
கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை-600 010.
மாவட்ட சமூகநல அலுவலர், செங்கல்பட்டு மாவட்டம்.

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-600 009.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் ம.வ.மே.) அவர்களின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலர், சென்னை-600 009.
நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை-600 009.
மனித வள மேலாண்மைத் துறை செயலாளரின்முதுநிலை முதன்மை தனிச் செயலர்,
சென்னை-600 009.
மனித வள மேலாண்மைத் (நி.சீ.II) துறை, சென்னை-600 009.(3 நகல்கள்)
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
11/8/22